**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.22/2013**

2025 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. முருகேசன் (அ.சா.7) | தொழில் | : விவசாயம் |
| த/பெ., | : திரு. உத்தமன் | வயது | : 59 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : கொங்கபட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 06.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1,4,5,6 எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் கொங்கபட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 5 வது எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 5 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் பணம் ரூ.39,500/– கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சியில் முதலாவது சாட்சிக் கையொப்பமும் என்னுடையதுதான். 07.04.2010 அன்று காலை 6.30 மணிக்கு பஸ் ஸ்டாண்டுக்கு மேற்குப்புறம் உள்ள சாலையில் வைத்து மேற்படி கையொப்பங்களை போட்டேன். பணம் ரூ.39,500/–ஐ தமிழரசி என்ற பெண்ணிடமிருந்து காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அதற்காக நான் கையொப்பம் செய்தேன். 5 வது எதிரியை போலீசார் விசாரித்தார்களா, இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 5 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7. ரூ.39,500/– கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.8.

**<u>5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

**அன்றைய தினம் நான் கொங்கபட்டியிலிருந்து அடிவாரத்துக்கு இருசக்கர வாகனத்தில் வந்தேன். நானும் பெரியசாமி என்பவரும் வந்தோம். ஊரில் காலை 05.00 மணிக்கு கிளம்பினோம். அன்றைய தினம் பேருந்து நிலையத்திற்குள் காந்தி சிலை வழியாகச் சென்று இடதுபுறமாக திரும்பிச் சென்றோம். வையாபுரி குளம் எங்கு உள்ளது என்று கேட்டால் பேருந்து நிலையத்தை அடுத்து செல்லும் பாலம் வையாபுரி குளத்தின் மீதுதான் செல்கிறது. எங்களை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. காவல் ஆய்வாளர் தெரிந்தவர் என்பதால் வணக்கம் சொல்வதற்காக வாகனத்தை நிறுத்தினேன். காவல் ஆய்வாளருடன் எத்தனை போலீசார் இருந்தார்கள் என்பதை நான் சரியாக கவனிக்கவில்லை. அந்த பணத்தை நான் எண்ணிப் பார்க்கவில்லை. ஆய்வாளர்தான் எண்ணிப் பார்த்தார். மேற்படி விபரங்களை போலீசாரிடம் சொல்லி கையொப்பமிட்டேனா என்றால் நான் படித்துப் பார்த்தபிறகு கையொப்பமிட்டேன். அத்தாட்சியில் என்ன விபரங்கள் இருந்தது என்றால் நான் மேலே சொன்ன விபரங்கள்தான் இருந்தது. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இனங்க ஆயக்குடிகாவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எவ்வித தொகையும் கைப்பற்றப்படவில்லை என்றும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.**

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.06 17:20:17 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**